03.02.2026.
S.C.No.49/2021

Crl.M.P.8/2025 மனு நாள் 15.07.2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.4 ஜீவிதா மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

A1 absent. 355 BNSS petition filed and allowed. A2 died.
1ம் எதிரி குறுக்கு விசாரணை

என் கணவருக்கு காயம்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. நான் சிப்காட்டில் வேலை பார்த்து வருகிறேன். எனது வேலை நேரம் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரையாகும். சம்பவத்தன்று நான் என் கணவரை காலையில் பார்த்தேன் அதன் பின்னர் மாலை நேரத்தில் அவரை நான் பார்க்கவில்லை. அதன் பின்னர் ஆம்புலன்சில் வைத்து மருத்துவமனையில் வைத்துப் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். 2,3 பேப்பர்களில் என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. என் கணவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரம் என் கொழுந்தன் அசா1 சொல்லித்தான் தெரியும் என்றால் என் கணவரும் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது சொன்னார். நான்குவழிச்சாலையில் க்ளப் எந்த இடத்தில் உள்ளது என்றால் கொடைரோட்டில் பாலாஜி பவனுக்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். திண்டுக்கல் மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்த பின்னர் மதுரை மருத்துவமனையிலும், காவல் நிலையத்திலும் இரண்டு மூன்று முறை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது கையெழுத்து எதுவும் போட்டேனா என்றால் கையெழுத்து போட்டமாதிரி ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதை மறைத்து சாலையில் தடுமாறி இடதுபுறமாக விழுந்ததை மறைத்து காயம்பட்ட என் கணவருக்கு ஆதரவாகவும், அசா1 க்கு ஆதரவாகவும் போலீசார் சொல்லி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் யாரும் வந்து

கணவரை தாக்கவில்லை என்றும் பின்னிட்டு வழக்கிற்காக போலீசார் சொல்லி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.02.03 17:34:03 +0530

Principal District Judge,
Dindigul.